பக்கங்கள்:-17

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆடி 01 | செவ்வாய்க்கிழமை | 17.09.2024 | அதிர்வு 046

## ரணில் - அநுரவை நம்பி ஏமாறாதீர்கள்

### மக்களுக்கு சஜித் எச்சரிக்கை




ரணில் விக்கிரமசிங்க மற்றும் அநுரகுமார திஸாநாயக்கவை நம்பி ஏமாற வேண்டாம் என்று நாட்டு மக்களிடம் 07



# வெற்றி உறுதி!

## மார்தட்டுகின்றார் ரணில்

வரும் ஜனாதிபதித் தேர்தலில் எனது வெற்றியை பிரசாரங்களில் கலந்துகொள்ளும் மக்களின் பெரும் கூட்டம் உறுதிப்படுத்தி வருகின்றது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். 06





## தமிழ்ப் பொது வேட்பாளருக்கு வாக்களிப்பதும் சிங்கள வேட்பாளருக்கு வாக்களிப்பதும் சமம்!

### ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிப்பதே சிறந்த வழி என்கின்றார் கஜேந்திரகுமார்

(ந.லோகதயாளன்)

"ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள், தமிழ்ப் பொது வேட்பாளருக்கு வாக்களிப்பதும், ஒற்றையாட்சியை வலியுறுத்தும் சிங்கள வேட்பாளருக்கு வாக்களிப்பதும் ஒன்றுதான். தமிழ்ப் பொது வேட்பாளருக்கு வாக்களிக்கும் பட்சத்தில், தேர்தலுக்குப் பின்னர் தமிழ்த் தேசிய அரசியலை ஒற்றையாட்சிக்குள் முடக்குவதற்கான சகல சதித்திட்டங்களும் முன்னெடுக்கப்படும்." 06








கடந்த பொதுத் தேர்தலில் யாழ் மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை வேட்பாளராகத் தமிழரசுக் கட்சியின் சின்னத்தில் களமிறங்கிய மாவை சேனாதிராஜாவுக்கு வாக்காளர்கள் ஆறாவது இடத்தை வழங்கி வீட்டுக்கு அனுப்பி இருந்தனர். அந்த மக்களின் முடிவு சரியானது என்பதை மாவை இப்போது நிரூபித்து வருகின்றார் என்பதையும் –

தமிழர் வரலாற்றில் ஒரு கட்சியின் தலைவர் எப்படி செயல்பட கூடாது என்பதற்கு மாவை ஒருவரே நல்ல உதாரணம் என்பதையும் –

நேற்று எனது பத்தியில் சுட்டிக்காட்டி இருந்தேன்.

நான் அந்தக் கருத்தை எழுதிய மை காய்வதற்குள் அந்த எழுத்து முற்றிலும் 06





தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் சஜித்துக்கு ஆதரவாக தேர்தல் பிரசாரக் கூட்டம்

காலம் : இன்று (17.09.2024)
நேரம் : பி.ப. 03 மணி
இடம் : சங்கிலியன் சிலையடி, நல்லூர் (கிட்டு பூங்கா)



# நாட்டில் முப்படையினரும் தயார் நிலையில் உள்ளனர்

எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலின் போது அவசரநிலை ஏற்பட்டால் துரித கதியில் செயற்பட முப்படைகளும் தயாராகியுள்ளன.

பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள விசேட கோரிக்கைக்கு அமைய முப்படையினரும் களமிறக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி முப்படையினரும் எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 08.00 மணி முதல் கடமைகளில் ஈடுபட உள்ளனர்.

# இலங்கை மீனவர்கள் மூவர் படகுடன் இந்தியக் கடற்பரப்பில் வைத்து கைது



**(ந.லோகதயாளன்)**

இந்தியாவின் தொண்டி கடற்பரப்பில் சந்தேகத்துக்கிடமாக நின்று கொண்டிருந்த இலங்கை பைப்பர் படகையும் அதிலிருந்த மூன்று இலங்கை மீனவர்களையும் இந்தியக் கடலோரக் காவல் படையினர் கைது செய்து கொண்டு சென்றுள்ளனர்.

இந்திய எல்லைக்குள் இயந்திரக் கோளாறு காரணமாக நின்று கொண்டிருந்த மூவரே கைது செய்யப்பட்டு மண்டபம் முகாமுக்குக் கொண்டு சென்றனர்.

இந்தியக் கடலோரக் காவல் படையின் மண்டபம் முகாமில் முழுமையான விசாரணைக்குப் பின்னர் மேற்படி மீனவர்கள் சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக இந்தியக் கடற்பகுதிக்கு வந்தார்களா அல்லது எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்டார்களா எனக் கண்டறிந்த பின்னர் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவுள்ளனர் என்று இந்தியக் கடலோரக் காவல் படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



# மக்களுக்காகச் சம்பளமின்றி சேவையாற்றுவாராம் சஜித்!

தாம் ஜனாதிபதியாகத் தெரிவானதன் பின்னர், வேதனமின்றி மக்களுக்காகச் சேவையாற்றவுள்ளார் என ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

“எந்தவித சந்தேகமுமின்றி, ஐக்கிய மக்கள் கூட்டணி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியைப் பதிவு செய்யும். தேர்தலில் வெற்றி பெறுவதற்காக அரசாங்கம் கதிர்காமம் உள்ளிட்ட புனித பூமிகளில் மதுபானசாலைகளுக்கான அனுமதிப் பத்திரங்களை வழங்குகின்றது. இது வேதனைக்குரிய விடயமாகும்.

பொதுமக்களின் வரியினூடாக ஜனாதிபதிக்கான சம்பளம் பெறுவது எனது எண்ணம் இல்லை.

அவ்வாறானவர்களிடம் இருந்து நாட்டை பொறுப்பேற்றும், இலங்கையைச் சிறந்த தரத்திற்கு முன்னேற்றுவதே எனது இலக்காகும்.”– என்றார்.










# தேசிய ஜனநாயக மக்கள் முன்னனி அநுரவை ஆதரிப்பதற்குத் தீர்மானம்

**(கே.வசந்தன்)**

தேசிய ஜனநாயக மக்கள் முன்னணி இம்முறை தேசிய மக்கள் சக்தி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்காவுக்கி ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளதாக அக் கட்சியின் தலைவர் எம்.ஆனந்தராஜா தெரிவித்துள்ளார்.

வவுனியா ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எமது கட்சி நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு ஆதரவு அளிப்பது என்பது தொடர்பில் உயர்மட்ட குழு கூடி ஆராய்ந்தது. அதில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய நாம் எமது முடிவை வெளியிடுகின்றோம்.

தென்னிலங்கையின் பிரதான வேட்பாளர்கள் வடபகுதிக்கு வருகை தந்து பல கட்சிகளிடமும் தமது ஆதவை கோரி வருகின்றனர். எமது கட்சி 2019 ஆம் ஆண்டு நிறுவன ரீதியாக உருவாக்கப்பட்ட கட்சி. இந்தநிலையில் பல ஜனாதிபதி வேட்பாளர்கள் எமது ஆதவையும் கோரியிருந்தார்கள். எமது கட்சியின் உயர் பீடம் ஆராய்ந்ததன் அடிப்படையில் தேசிய மக்கள் சக்தியில் போட்டியிடும் அநுரகுமார திஸாநாயக்காவுக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளோம்.

தேசிய மக்கள் சக்தி வேட்பாளர் வெற்றி பெறுவதன் மூலமே இந்த நாட்டை ஊழல் அற்ற ஒரு நாடாக மாற்ற முடியும். இன்று முழு நாடும் அநுரவுடன் நிற்கின்றது. மக்கள் மாற்றத்தை விரும்புகிறார்கள். அந்த மாற்றத்தில் நாமும் பங்காளராகி எமக்கான தேவைகளைப் பெற தேசிய மக்கள் சக்திக்கு எமது ஆதரவை தமிழ் மக்கள் வழங்க வேண்டும். – எனத் தெரிவித்தார்.

# புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் ‘வட்ஸ்அப்’ செயலி மூலம் கசிந்ததா?



நடந்து முடிந்த ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையின் வினாத்தாள் வட்ஸ்அப் செயலி மூலம் பரிமாறப்பட்டுள்ளதாகப் பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

அநுராதபுரத்தில் உள்ள பாடசாலை ஒன்றிலிருந்து மேற்படி வினாத்தாள் கசிந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், அலவ்வ பகுதியில் மேலதிக வகுப்புகளை நடத்திவரும் ஆசிரியர் ஒருவரால், அந்த வினாத்தாளுக்கு நிகரான வினாத்தாள் வாட்ஸ்அப் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகப் பெற்றோர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இந்தநிலையில், மேற்படி விவகாரம் தொடர்பில் வினாத்தாளைத் தயாரித்த உரிய அதிகாரிகள் குழுவிடம் இன்று விசாரணை நடத்தப்படும் எனப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.




# சவகச்சேரியில் ரணிலுக்கு ஆதரவாக நேற்றுக் கூட்டம்

(த.சுபேசன்)

ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து நேற்றுத் திங்கட்கிழமை சாவகச்சேரி டச் வீதியில் அமைந்துள்ள மண்டபத்தில் பிரசாரக் கூட்டம் ஒன்று இடம்பெற்றிருந்தது.

யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனுடைய ஏற்பாட்டில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினுடைய யாழ்ப்பாண மாவட்ட இணைப்பாளர்கள், தென்மராட்சியைச் சேர்ந்த பொது அமைப்புக்களுடைய பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.







## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சரி என்பதை தனது நடத்தை மூலம் நேற்று நிரூபித்து விட்டார் மாவையர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முடிவை நேற்று மதியம் வவுனியாவில் வைத்து ஊடகவியலாளர்களுக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்துவிட்டு, யாழ்ப்பாணம் திரும்பும் வழியில் கிளிநொக்கியில் பொது வேட்பாளர் அரியநேத்திரனின் கூட்டத்தில் ஏறி அவரை ஆதரித்து முழங்கி இருக்கிறார் மாவையர்.

இந்தச் செயற்பாட்டைத் தான் அண்மைக்காலமாக 'சணம் பித்தம் சணம் வாதம்' போக்கு என்று அப்பட்டமாக நான் விமர்சித்து வந்தேன். அதை – என் எழுத்தை – நேற்றும் மீண்டும் ஒரு தடவை உறுதிப்படுத்தி இருக்கின்றார் அவர்.

மாவையின் இந்தப் போக்குக்கு – குழப்பகரமான நடத்தைக்கு – கோமாளித்தனத்திற்கு – காரணம் என்ன?

பலரும் இப்போது எழுப்பும் இந்த கேள்விக்கு நேற்று மூத்த பிரமுகர் ஒருவர் எனக்குச் சொல்லாமல் சொல்லி பதில் தந்தார். அதை வாசகர்களுடன் அப்படியே பரிமாறிக் கொள்கிறேன்.

அந்தப் பிரமுகர் வயதில் மூத்த ஒரு வர்த்தகர். ரொம்பவும் மரியாதைக்குரியவர். தமிழரசு கட்சியின் பால் நீங்காப் பற்றுக் கொண்ட ஓர் அரசியல் பார்வையாளர். நான் மாவை சேனாதிராஜா குறித்து அவ்வப்போது அதிகம் காட்டமாக எழுதுகிறேன் என்ற ஒரு குறை அவர் மனதில் இருந்ததை நான் அறிவேன்.

நேற்று 'மாலை முரசு' வெளியாகி சில நிமிடங்களில் அந்த அழைப்பு அவரிடம் இருந்து வந்தது. மாலை முரசு முன்பக்கத்தில் சஜித்துக்கு வாக்களிக்க மாவை கோரும் செய்தி தலைப்பாக பெரிய எழுத்தில் வந்திருந்தது.

அதேசமயம்முன்பக்கமேல்மூலையில் சிறிய பெட்டிச் செய்தியில் 'பொது வேட்பாளர் அரியத்தை ஆதரித்து மேடை ஏறிய மாவை' என்ற தகவல் வெளியாகி இருந்தது.

அவர் தலைப்புச் செய்தியை மட்டும் பார்த்திருப்பார் போலும். தமிழரசுக் குழப்பம் தீர்ந்தது என்று எண்ணியிருப்பார் என நினைக்கிறேன்.

அதை வாசித்ததும் உடனேயே எனக்கு அழைப்பு எடுத்து இருக்கிறார்.

"தம்பி.. ஒரு மாதிரி நீ எழுதி , எழுதியே தெண்டி மாவையைச் சரியான லைனுக்கு வர பண்ணி விட்டாய் போலும்..!" என்று சிலாகித்தார் அவர்.

"இல்லை ஐயா. அப்படி நடக்கவில்லை. எதற்கும் முன் பக்க மேல் மூளையில் உள்ள பெட்டிச் செய்தியை வாசியுங்கோ...!" என்று கூறி தொலைபேசி அழைப்பைத் துண்டித்தேன்.

இரண்டு நிமிட நேரம் இருக்கும். மீண்டும் அவரிடம் இருந்து அழைப்பு வந்தது. நான் "ஹலோ!" சொல்ல முன்னரே அவரிடம் இருந்து பதிலும் வந்துவிட்டது. இரண்டொரு சொற்களில் அந்தப் பதில் முடிந்தது. தொலைபேசியையும் கட் பண்ணினார் அவர். அவ்வளவு சீற்றம்போலும் அவருக்கு.

ஒரு சில சொற்களோடு முடிந்துவிட்ட அந்தப் பதிலை புரிந்து கொள்ள எனக்கு இரண்டொரு நிமிடங்கள் தேவைப்பட்டன. அவர் கூறிய பதிலின் ஊடு புரிய வைக்கப்பட்ட செய்தியை – தெளிவை – நான் விளங்கிக் கொண்டேன். அது சரியான காரணமாக இருக்கலாம். வாசகர்களிடமே அதற்கான ஊகத்தை விட்டு விடுகிறேன்.

அந்தமூத்தவர்த்தகப்பிரமுகர்சொன்ன அந்தப் பதில் என்ன தெரியுமா?

"அது தம்பி... நாளைக்கு (இன்றைக்கு) பருவம் (போயா தினம்)."

அதுதான் அப்படி நடந்து கொண்டாராம் மாவையர்.

இந்த வாக்கியத்தின் உள் பொருளை வாசகர்களே தேடிப் புரிந்து கொள்வார்களாக...!

---

## வெற்றி உறுதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பதுளையில் நேற்று திங்கட்கிழமை பிற்பகல் நடைபெற்ற "ரணிலால் இயலும்" பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"நாங்கள் வெற்றி பெறுகின்றோம்! இந்தப் பெரும் கூட்டத்தைப் பார்த்தால் எமது வெற்றி உறுதியாகின்றது. இந்த வாரம் நீங்கள் உங்கள் வாழ்க்கையின் மிக முக்கியமான தேர்தலை எதிர்கொள்கின்றீர்கள்.

நாம் வளமான, நிலையான நல்ல வாழ்க்கை வாழப் போகின்றோமா அல்லது வரிசை யுகத்திற்குத் திரும்பப் போகின்றோமா என்பதை இது தீர்மானிக்க வேண்டும். நாட்டை மீண்டும் வரிசை யுகத்திற்கு கொண்டு செல்லும் தவறைச் செய்ய வேண்டாம் என்று மக்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மைக்காக கடந்த இரண்டு வருடங்களில் நாம் முன்னெடுத்த வேலைத்திட்டத்தை உறுதிப்படுத்தும் வகையில் மக்கள் எனக்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

ஏனைய தலைவர்கள் முடியாது என்று கூறுகையில் நான் ஆட்சியை ஏற்றேன். இந்நாட்டு மக்கள் உணவு, மருந்து, எரிபொருள், எரிவாயு இன்றி தவிக்கும் போது சஜித்தோ, அநுரவோ கண்டுகொள்ளவில்லை. மருந்து இல்லாமல் மக்கள் இறந்தபோது அவர்கள் வருத்தப்படவில்லை. அவர்கள் தங்கள் அரசியல் இலக்குகளை அடைய மக்களை தியாகம் செய்ய விரும்பினர்.

மக்களைப் பற்றி சிந்திக்கும் அனைவரும் என்னுடன் இணைந்தனர். நாம் அனைவரும் ஒன்றிணைந்து இரண்டு வருடங்கள் என்ற குறுகிய காலத்தில் நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுத்தோம். 2025ஆம் ஆண்டில் மக்களின் வாழ்க்கைச் சுமையை இலகுவாக்க முடியும்.

ஒரு நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடையும் போது, பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப சுமார் 5 வருடங்கள் ஆகும். ஆனால் இரண்டு வருடங்கள் என்ற குறுகிய காலத்தில் நாட்டின் பொருளாதாரத்தை மிக விரைவாக மீட்டோம். நாட்டைக் கட்டியெழுப்பும் திட்டத்தின் மூன்றாம் ஆண்டு காலப்பகுதியில் அதன் வித்தியாசத்தை மக்கள் காணலாம்.

நாங்கள் இன்னும் தொங்கு பாலத்தில் இருக்கின்றோம். இன்னும் கொஞ்ச தூரம் பயணிக்க வேண்டும். இந்த ஜனாதிபதித் தேர்தலில் இந்தப் பயணத்தை நிரந்தரமாக்க வேண்டும். ஹ்னுவடயே கதையில் வருவதைப் போலல்லாமல், குழந்தையின் உரிமையைப் பெற தப்பித்து ஓடிய இரண்டு நதாலியாக்கள் உள்ளனர். அவர்களிடம் திட்டம் இல்லை. நாட்டைப் பற்றிய தொலைநோக்குப் பார்வை இல்லை. வரிகளைக் குறைப்பதாகச் சொன்னாலும் அதற்கான அதிகாரத்தை சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து பெறவில்லை. அதனால்தான் மக்கள் முன்பொய் சொல்கிறார்கள்.

தப்பித்து ஓடிய தலைவர்களை நம்ப முடியாது. தப்பித்த நதாலியாக்கள் இருவரினாலும் குழந்தையை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாது. எனவே, செப்டெம்பர் 21ஆம் திகதி மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தை தொடருமாறு கேட்டுக்கொள்கின்றேன்." – என்றார்.

---

## தமிழ்ப்பொது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

எனவே, தமிழ்த் தேசியக் கொள்கைக்கு உண்மையாக இருப்பதற்கான வாய்ப்பு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிப்பதன் மூலமாக மாத்திரமே சாத்தியமாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், இம்முறை ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் பகிஷ்கரிக்க வேண்டும் என வலியுறுத்தி வரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நிலைப்பாடு குறித்து தெளிவுபடுத்தும் வகையில் நேற்று திங்கட்கிழமை கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே கஜேந்திரகுமார் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"இம்முறை ஜனாதிபதித் தேர்தலைத் தமிழ் மக்கள் பகிஷ்கரிக்க வேண்டும் என்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நிலைப்பாடு பற்றி நாம் ஏற்கனவே அறிவித்திருந்தோம். இருப்பினும் இந்த விடயத்தைப் பொறுத்தமட்டில் நான் இங்கு இருந்திருந்தால் எனது நிலைப்பாடு வேறானதாக இருந்திருக்கும் என்று சர்ச்சைகளை ஏற்படுத்தும் வகையில் திட்டமிட்டு சில கருத்துக்கள் பகிரப்பட்டு வருகின்றன.

இருப்பினும் 2009ஆம் ஆண்டு போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னர் கொள்கை ரீதியில் சில விடயங்களை நாம் தெளிவுபடுத்தியிருந்தோம். குறிப்பாக 2009 உடன் தமிழ்த் தேசிய அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைத்தவிட்டதாகவே சிங்கள தேசம் நம்பியது. சிங்கள தேசியவாதத்தின் ஊடாக தமிழ்த் தேசியவாதத்தை முடிவுக்குக் கொண்டுவந்துவிடலாம் என நம்பப்பட்ட சூழலில், நாம் அதனை நிராகரித்து தமிழ்த் தேசியம் தொடர்பான நிலைப்பாட்டை உறுதியாகக் கடைப்பிடித்து வந்திருக்கின்றோம்.

அந்தவகையில் தமிழ் பிரதிநிதித்துவத்தை இழக்காமல், அதேநேரம் தமிழ்த் தேசியத்தை முன்னிறுத்தி, சிங்கள பௌத்த தேசியவாதத்துக்கு எதிரான நிலைப்பாட்டை வெளிக்காட்டக் கூடிய ஒரேயொரு தேர்தல் ஜனாதிபதித் தேர்தல் மாத்திரமேயாகும். ஏனெனில் இந்தத் தேர்தலின் ஊடாக நாம் அடைந்து கொள்ளப்போவது எதுவுமில்லை. எனவே, இந்தத் தேர்தலைப் பகிஷ்கரிப்பதன் ஊடாக சிங்கள தேசியவாதம் உச்சத்தில் இருக்கையில் தமிழ்த் தேசியவாதம் மூலம் வலுவான அழுத்தத்தைப் பிரயோகிக்க முடியும்.

அடுத்ததாக எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியப் பொதுக்

07▶

# தமிழின இலட்சியத்துக்காகவே என் வாக்கினையும் அளிப்பேன்

## தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்கும் பரப்புரைக் கூட்டத்தில் மாவை தெரிவிப்பு

தமிழின விடுதலைக்கான – இலட்சியத்துக்கான பயணத்தில் அணிதிரண்டுள்ள பெருந்தொகையான உங்களைப் போன்று என்னுடைய வாக்கினையும் அளிப்பேன் என்ற உறுதிப்பாட்டுடன் தெரிவிக்கின்றேன் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

கிளிநொச்சி பசுமைப் பூங்கவில் நேற்று திங்கட்கிழமை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் ஏற்பாட்டில் நடைபெற்ற தமிழ்ப் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரனை ஆதரித்து 'தமிழ்த் தேசிய இனத்தின் எழுச்சியே தமிழ்த் தேசத்தின் மீட்சி' எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

"தமிழர்களின் எழுச்சி நிகழ்வான நாளாகவும் தமிழினம் விடுதலை பெறாத நிலையில் நடைபெறுகின்ற மற்றொரு ஜனாதிபதித் தேர்தலாகவும் எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறுகின்ற தேர்தல் அமைகின்றது.

அவ்விதமான தேர்தலில் எமது விடுதலையையும், அதற்கான இலட்சியப் பயணதுக்காகவும் எங்களுடைய வாக்குகளைப் பயன்படுத்துவோம் என்ற உறுதியோடு இந்த எழுச்சி நிகழ்வில் பங்கெடுத்துள்ளீர்கள்.

விடுதலைக்கான போராட்டத்தில் மக்களையும், போராளிகளையும் பலிகொடுத்துள்ளோம். அந்தவகையில் நாம் எமது பயணத்திலே உறுதியாக இருக்கின்றோம், அந்தப் பயணத்தை வலுவானதாக மேற்கொள்ள வேண்டும் என்ற இலட்சியத்துடன் இருக்கும் உங்கள் முன்னிலையில் அந்த இலட்சியத்துக்காக என்னுடைய வாக்கினையும் அளிப்பேன் என்ற உறுதிப்பாட்டுடன் வருகை தந்துள்ளேன்.



அதுமட்டுமன்றி, நீங்கள் அனைவரும், தமிழர்களின் இட்சியத்துக்கான எழுச்சியை வெளிப்படுத்தும் வகையில் எதிர்வரும் 21ஆம் திகதி உங்களுடைய வாக்குகளை அளிக்க வேண்டும் என்றும் நான் வலியுறுத்துகின்றேன்.

கடந்த காலத்தில் எமது விடுதலைக்காக அர்ப்பணிக்கப்பட்ட உயிர்களை நெஞ்சில் நிறுத்தியவனாக, அதற்காகப் பயணிக்கும் எமது உயிர்களும் எப்போது வேண்டுமானாலும் போகலாம், பணயம் வைக்கப்படலாம் என்பதை நினைவுபடுத்தியவனாக, எதிர்கால எமது இலட்சியத்துக்கான பயணத்தில் அர்ப்பணிப்புச் செய்வதற்குத் தயாராக உள்ள மக்களுக்கும் நன்றி உடையவனாக தேசமாக எழுச்சி அடைவோம். அதற்காக உழைப்போம் என்று உரைத்து விடைபெறுகின்றேன்." – என்றார்.

---

### தமிழ்ப்பொது...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

கட்டமைப்பினரால் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவர் களமிறக்கப்பட்டிருக்கின்றார். இருப்பினும் தமிழர்களுக்கு சாபக்கேடாக இருக்கின்ற 13 ஆவது திருத்தத்தை ஆதரித்தவர்களும், ரணில் விக்கிரமசிங்கவே சிறந்த ஆட்சியாளர் எனக் கூறியவர்களுமே தற்போது அந்தப் பொதுக் கட்டமைப்பில் இருக்கின்றார்கள்.

எனவே, அவர்கள் பொது வேட்பாளரைக் களமிறக்குவதன் ஊடாக தமிழ்த் தேசியத்தைக் கைவிட்டு, ஒற்றையாட்சிக்குள் 13 ஆவது திருத்தத்தை முன்னிலைப்படுத்தக்கூடிய சூழலை உருவாக்க முயற்சிக்கின்றார்கள். எனவே, தமிழ் மக்கள் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு வாக்களிப்பதும், ஒற்றையாட்சியை வலியுறுத்தும் சிங்கள வேட்பாளருக்கு வாக்களிப்பதும் ஒன்றுதான். பொது வேட்பாளருக்கு வாக்களிக்கும் பட்சத்தில், தேர்தலுக்குப் பின்னர் தமிழ்த் தேசிய அரசியலை ஒற்றையாட்சிக்குள் முடக்குவதற்கான சகல சதித்திட்டங்களும் முன்னெடுக்கப்படும் என்பதை இப்போதே கூறிவைக்கின்றோம்.

அதேபோன்று இங்கு நாம் பூகோள அரசியல் சூழலையும் கருத்தில் கொள்ள வேண்டும். மேற்குலக நாடுகளும், இந்தியாவும் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றியீட்டுவதையே விரும்புகின்றன. ஆனால், ரணில் விக்கிரமசிங்கவைத் தமிழ் மக்களுக்கு சாதகமானவராகக் காண்பித்து வந்த நிலை மாறியிருக்கும் தற்போதைய சூழ்நிலையில், அவருக்குத் தமிழர்கள் வாக்களிக்க மாட்டார்கள் என்பதை இந்தியாவும், மேற்குலகமும் புரிந்துகொண்டிருக்கின்றது.

ஆகவே, ஏனைய வேட்பாளர்களுக்கு அளிக்கப்படக்கூடிய வாக்குகளை ரணில் விக்கிரமசிங்கவுக்கு அளிக்கச் செய்வதிலும் அல்லது ரணிலுக்குக் கிடைக்காத வாக்குகள் ஏனைய வேட்பாளர்களுக்கும் கிடைக்காமல் இருப்பதை உறுதிப்படுத்துவதையும் இலக்காகக்கொண்டு சில நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே இதுவரையில் சமஷ்டி என்ற வார்த்தையை உச்சரிக்காமல் இருந்த தமிழரசுக் கட்சி, இம்முறை தேர்தலில் சமஷ்டியை வலியுறுத்தி சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிப்பதாக அறிவித்திருக்கின்றது. எனவே, இன்றளவிலே தமிழ்த் தேசியக் கொள்கைக்கு உண்மையாக இருப்பதற்கான வாய்ப்பு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிப்பதன் மூலமாக மாத்திரமே சாத்தியமாகும். ஆகவே, இனிவருங்காலங்களில் தமிழர்களை எவ்வகையிலும் ஏமாற்ற முடியாது என்பதை இந்தத் தேர்தலில் காண்பிக்க வேண்டும்." – என்றார்.

---

### ரணில் - அநுரவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கேட்டுக்கொள்கின்றேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"அநுரகுமார திஸாநாயக்க மற்றும் ரணில் விக்கிரமசிங்க கூட்டணியிடம் நாட்டை ஒப்படைப்பதா? இல்லை என்றால் நாட்டைக் கட்டி எழுப்புகின்ற, நாட்டை வெற்றி பெறச் செய்யும் பொதுமக்களின் யுகத்திற்காக ஐக்கிய மக்கள் சக்தியை வெற்றி பெறச் செய்வதா? என்ற தீர்மானம் மக்கள் வசமே காணப்படுகின்றது.

இன்று ரணில் மற்றும் அநுர பெரிய டீல் ஒன்றை செய்திருக்கின்றார்கள். அது சஜித் பிரேமதாஸவை தோல்வியடையச் செய்ய வேண்டும் என்கின்ற டீல் ஆகும்.

ரணில் மற்றும் அநுர அரசியல் ஜோடி எந்த அளவு டீல் செய்து கொண்டாலும், மக்களை சுபீட்சமான வளமான வாழ்க்கைக்கு கொண்டு செல்வதற்கு மக்களுடனே எமது டீல் காணப்படுகின்றது." – என்றார்.







# பதுளை பரப்புரைக் கூட்டத்தில் ரணிலை ஆதரித்து திரண்ட மக்கள்

பதுளை, செப்ரெம்பர். 17

“ரணிலால் இயலும்” பரப்புரைக் கூட்டம் பதுளையில் நேற்று திங்கட்கிழமை பிற்பகல் நடைபெற்றது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தக் கூட்டத்தில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, இராஜாங்க அமைச்சர்களான சாமர சம்பத் தஸநாயக்க, வடிவேல் சுரேஷ், நாடாளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்தகுமார், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், முன்னாள் அமைச்சர்களான ஹரின் பெர்னாண்டோ, தலதா அத்துகோரள உள்ளிட்டோர் உரையாற்றினார்கள்.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பாதுகாப்பு மும்முரம்

எதிர்வரும் 21ஆம் திகதி - அதாவது இன்னும் நான்கு நாள்களில் - நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் முழு மும்முரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தேர்தலை ஒட்டிய விசேட கடமைகள் மற்றும் பாதுகாப்பிற்காக அறுபதாயிரம் பொலிஸார் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

இப்பணியில் 54 ஆயிரம் பொலிஸ் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துவதற்கு முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது அந்த எண்ணிக்கை அறுபதாயிரமாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் துறையின் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி நிஹால் தல்துவா தெரிவித்திருக்கின்றார்.

இதேவேளை, தேர்தல் கடமைகளுக்காக விசேட அதிரடிப்படைச் சிப்பாய்களும் களத்தில் இறக்கப்படவுள்ளனர் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில் -

வாக்களிப்பு நிலையங்களில் குழப்பம் ஏற்பட்டால் துப்பாக்கிச்சூட்டை நடத்துமாறு கடமையில் உள்ள படையினருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

இவ்வாறான செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த பொலிஸ் துறையினர் மற்றும் பாதுகாப்பு படையினருக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வாக்களிப்பு தினத்தன்றும் அதன் பின்னரும் நாட்டின் பாதுகாப்பிற்காக விசேட பாதுகாப்பு வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த ஏற்கனவே தயார் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்த அமைச்சர், பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினருக்கு மேலதிகமாக முப்படையினரும் களமிறக்கப்படவுள்ளனர் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, வாக்களிப்பின் பின்னர் வாக்குப்பெட்டிகளை வாக்கு எண்ணும் நிலையங்களுக்குக் கொண்டு செல்லும் போதும் விசேட பாதுகாப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி தேர்தலின் வாக்களிப்பு தினத்தன்று வாக்களிப்பு முடிந்ததும் ஊரடங்கு பிரகடனப்படுத்தப்படலாம் என்ற பேச்சடிபடுகின்ற போதும் அத்தகைய நோக்கமோ திட்டமோ எதுவுமில்லை என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஊரடங்கை அறிவிப்பதற்கான எந்த நடவடிக்கையையும் எடுக்கப்படவில்லை எனவும் இது குறித்து தீர்மானிக்கும் அதிகாரம் ஜனாதிபதியிடமே உள்ளது எனவும் அமைச்சுத் தரப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுவரை ஐந்நூறுக்கும் அதிகமான தேர்தல் பிரசார கூட்டங்கள் நாடாளவிய ரீதியில் இடம்பெற்றுள்ள நிலையில் குறிப்பிடத் தக்க எந்த வன்முறையும் இடம்பெறவில்லை எனவும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

நீதியான, சுதந்திரமான தேர்தல் வன்முறையின்றி நடந்து முடியும் என நம்புவோம்.



# ஒரு தசாப்த காலத்தின் பின்னர் காஷ்மீரில் சட்டமன்றத் தேர்தல்

ஒரு தசாப்த காலத்தின் பின்னர் முதன் முறையாக காஷ்மீரில் 47 சட்டமன்றத் தொகுதிகளுக்கான தேர்தல்கள் இடம்பெறவுள்ளன.

இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளினாலும் உரிமை கோரப்படும் பிரதேசங்களிலேயே தேர்தல்கள் நடைபெறவுள்ளன.

கடந்த 1990 ஆம் ஆண்டு முதல் இந்திய நிர்வாகத்திற்கு எதிராக ஆயுததாரிகள் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.


இதன் காரணமாக ஆயுததாரிகள், பாதுகாப்புப் படையினர் பொதுமக்கள் உட்பட ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்துக்கள் பெரும்பான்மையாக உள்ள ஜம்மு காஷ்மீர் பகுதியில் 43 தொகுதிக்கான தேர்தல்கள் மூன்று கட்டங்களாக இடம்பெறவுள்ளன.

பிரதமர் நரேந்திர மோடியின் அரசாங்க நிர்வாகம் ஜம்மு மற்றும் காஷ்மீரின் சுயாட்சியை இரத்து செய்ததுடன் மாநில அந்தஸ்தும் அகற்றப்பட்டது.

அதன் பின்னர் இரண்டு கூட்டாட்சி நிர்வாக பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டதன் பின்னர், இப்பகுதி ஒரு கூட்டாட்சி நிர்வாகத்தினால் நிர்வகிக்கப்படுகின்றன.

காஷ்மீரில் முதல் கட்ட தேர்தல் செப்டம்பர் 18, 2 ஆவது கட்ட தேர்தல் செப்டம்பர் 25, 3 ஆவது கட்ட தேர்தல் ஒக்டோபர் 1 ஆம் திகதி நடைபெறும். 3 கட்ட வாக்குகளும் ஒக்டோபர் 8 ஆம் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.





# அதிதி ராவ் ஹைதாரியை மணம் முடித்தார் சித்தார்த்

நடிகர் சித்தார்த்தும், நடிகை அதிதி ராவ் ஹைதாரியும் திருமணம் செய்து கொண்டதை அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளனர்.

நடிகர் சித்தார்த்தும், நடிகை அதிதி ராவ் ஹைதாரியும் காதலில் இருக்கின்றனர் என செய்திகள் பரவியது.

இதனை உறுதிப்படுத்தும் விதமாக இருவரும் இணைந்து பொது இடங்களில் உலா வரும் புகைப்படங்களும் வெளியாகின.

மேலும் இவர்கள் இருவருக்கும் நிச்சயதார்த்தம் நடைபெற்றதாகவும் சமூக வலைத்தளத்தில் பதிவிட்டிருந்தனர். அதில் விரைவில் திருமணம் குறித்து வெளியிடுவோம் என்றும் கூறி இருந்தனர்.

இதனைத் தொடர்ந்து நேற்று நடிகர் சித்தார்த்தும், நடிகை அதிதி ராவ் ஹைதாரியும் தெலுங்கானா மாநிலத்தில் உள்ள 400 ஆண்டுகள் பழமையான ஸ்ரீரங்க நாயக சுவாமி கோவிலில் திருமணம் செய்து கொண்ட புகைப்படங்களை சமூக வலைத்தளங்களில் பகிர்ந்துள்ளனர்.

சித்தார்த்-அதிதி தம்பதிக்கு ரசிகர்களும், திரைத்துறையினரும் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகிறார்கள்.







# ஆங்கில கால்வாயை கடக்க முயன்ற எட்டு புலம்பெயர்ந்தோர் உயிரிழப்பு

பிரான்சில் இருந்து பிரித்தானியாவுக்கு ஆங்கில கால்வாயை கடக்க முயன்ற போது, சிறு படகு ஒன்று கவிழ்ந்ததில் 8 புலம்பெயர் மக்கள் மரணமடைந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

மேற்படி விபத்தானது நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

சிறு படகுகளில் பிரித்தானியாவுக்கு படையெடுக்கும் புலம்பெயர் மக்களை கட்டுப்படுத்தும் நோக்கில் பிரித்தானியா மற்றும் பிரான்ஸ் அரசாங்கங்கள் பல ஆண்டுகளாக போராடி வருகின்றன.

பிரான்சில் இருந்து சட்டவிரோதமாக பிரித்தானியாவுக்குள் நுழையும் பொருட்டு பல ஆயிரம் யூரோ தொகையை ஆட்கடத்தல் நபர்களுக்கு செலவிட்டு சிறு படகுகளில் இடம் பிடிக்கின்றனர்.

இந்த விபத்தானது படகு புறப்பட்ட சில மணி நேரத்திலேயே நடந்துள்ளதாக பிரான்ஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், சிறு படகுகளில் மேற்கொள்ளும் அபாயகரமான பயணத்தை சமீப நாள்களில் பல முறை புலம்பெயர்ந்தோர் முன்னெடுத்துள்ளனர் என கடல்சார் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதில், கடந்த 2 நள்களில் மட்டும் 24 மணி நேரத்தில் 200 பேர் மீட்கப்பட்டுள்ளனர்.

வடக்கு பிரெஞ்சு கடற்கரையில் அதிகளவான மக்களை ஏற்றிச் சென்ற படகு ஒன்று இந்த மாதம் கவிழ்ந்ததில் குறைந்தது 12 புலம்பெயர்ந்தோர் இறந்தனர்.

இதில், பெரும்பாலானோர் எரித்திரியாவை சேர்ந்தவர் என்றே கூறப்படுகிறது.

இந்த ஆண்டு மட்டும் இதுவரை ஆங்கில கால்வாயை கடக்கும் முயற்சியில் 37 புலம்பெயர் மக்கள் இறந்துள்ளனர். 2023 இல் இறப்பு எண்ணிக்கை வெறும் 12 என்றே கூறப்படுகிறது.

இதனிடையே, இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்து 22 ஆயிரத்துக்கும் மேற்பட்ட புலம்பெயர்ந்தோர் கால்வாயைக் கடந்து பிரித்தானியாவிற்கு சென்றுள்ளனர் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# கடவுச்சீட்டுக்கான கட்டுபாடுகளை நடைமுறைப்படுத்தியது ஜேர்மனி




ஜேர்மனியின் அனைத்து எல்லைகளிலும் கடவுச்சீட்டு கட்டுப்பாடுகளை நேற்று முதல் நடைமுறைப்படுத்தியுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேற்படி கட்டுப்பாட்டு நடவடிக்கையானது புலம்பெயர்தலைக் கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதுவரை ஜேர்மனியின் கிழக்கு மற்றும் தெற்கு நில எல்லைகளில் மட்டும் பாதுகாப்பு பரிசோதனைகள் நடத்தப்பட்டு வந்த நிலையில், ஜேர்மனியின் அனைத்து எல்லைகளிலும் கடவுசீட்டு கட்டுப்பாடுகளை நீட்டிக்க இருப்பதாக ஜேர்மன் உள்துறை அமைச்சரான நான்சி ஃப்ரேஸர் தெரிவித்திருந்தார்.

ஜேர்மனியில் ஏற்கனவே புலம்பெயர்தலைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் விவாதங்கள் அதிகரித்து வரும் நிலையில், விசா இல்லாமல் ஜேர்மனிக்குள் நுழையும் மக்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவதற்காக இந்த நடவடிக்கையை நடைமுறைப்படுத்தியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில், குறைந்தபட்சம் அடுத்த ஆறு மாதங்களுக்கு ஜேர்மனியின் வடக்கு மற்றும் மேற்கு எல்லைகள் வழியாக ஜேர்மனிக்குள் நுழைவோரை சோதனைக்குட்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஜேர்மனியானது டென்மார்க், நெதர்லாந்து, பெல்ஜியம், லக்ஸம்பர்க், பிரான்ஸ், சுவிட்சர்லாந்து, ஆஸ்திரியா, செக் குடியரசு மற்றும் போலந்து ஆகிய நாடுகளுடன் தனது எல்லையைப் பகிர்ந்துகொள்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.



# மொட்டுக் கட்சியினர் இனவாதமான அரசியலையே முன்னெடுக்கின்றனர்

## அநுரகுமார திஸநாயக்க தெரிவிப்பு

மொட்டுக் கட்சியினரின் இனவாத செயற்பாடுகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே தற்போது தலைமை வகிக்கின்றார் என தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

மாவனெல்லையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

“ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எப்போதும் இனவாத அரசியலையே முன்னெடுக்கின்றது. 2015ஆம் ஆண்டு ராஜபக்ஷக்கள் தோல்விய டைந்தனர்.

அவர்கள் பொது மக்களின் கோடிக் கணக்கான சொத்துக்களைக் கொள் ளையடித்திருந்தனர். மக்கள் அதற்கு எதிராக வாக்களித்தமையை அடுத்து அவர்கள் தோல்வியைச் சந்தித்தனர்.

2016 ஆம் ஆண்டு முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்பு பிரசாரங்களையடுத்து, தோல்வியடைந்த மஹிந்த குழுவினர் மீண்டும் தலைநிமிர்ந்தனர்.

அதனைத் தொடர்ந்து ஏப்ரல் 21 தாக்குதலின் பின்னர் மஹிந்த தரப்பு முழுமையாகத் தலைநிமிர்ந்ததுடன், மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியது.

அதன் பின்னரும் ஊழல் மோசடிக ளில் ஈடுபட்டார்கள், இவ்வாறான சூழலி லேயே நாடு வங்குரோத்து நிலையை அடைந்தது. அதன்பின்னர் வாக்களித்த மக்கள் அவர்களை விரட்டியடித்தார்கள். எனினும் அந்த குழுவினருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே தலைமை வகிக்கின்றார்.”– என்றார்.












# தேர்தலின்போது இலங்கைக்கு வருகின்ற அமெரிக்கப் பிரஜைகளுக்கு எச்சரிக்கை

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலைக் கருத்திற் கொண்டு இலங்கைக்கு வரும் அமெரிக்கப் பிரஜைகளை எச்சரிக்கையுடன் செயற்படுமாறு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இலங்கைக்கான தமது புதிய பயண ஆலோசனையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் காலப்பகுதியில், தேர்தலுக்கு முன்னரான காலப்பகுதியிலும், அதற்குப் பின்னரான காலப் பகுதியிலும் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படலாம் எனவும் அந்த ஆலோசனையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுபவர்களைக் கலைப்பதற்கு காவல்துறையினர் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகங்களை நடத்தக்கூடும்.

ஆகையால் அமெரிக்கப் பிரஜைகள் எச்சரிக்கையாகச் செயற்படுமாறு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.



# உச்சபட்ச விலையையும் மீறி விற்பனை செய்யப்படும் அரிசி

நாட்டின் பல பகுதிகளில் உச்சபட்ச விலையை மீறி அரிசி விற்பனை செய்யப்படுவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்போது நாட்டு அரிசி 1 கிலோகிராம் 220 ரூபாவாகவும் சம்பா அரிசி 1 கிலோகிராம் 230 ரூபாவாகவும் விற்பனை செய்வதற்கு உச்சபட்ச விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

எனினும், சந்தையில் 1 கிலோகிராம் நாட்டு அரிசி 235 ரூபாவுக்கும் சம்பா அரிசி 245 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.





# சொகுசு கார் விபத்து: ஒருவருக்குக் காயம்

நானுஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹட்டன் – நுவரெலியா பிரதான வீதியில், நானு ஓயா – வெண்டிகோனர் பகுதியில் நேற்று பிற்பகல் சாரதியின் கட்டுப்பாட்டையிழந்து அதிசொகுசு காரொன்று வீதியோரத்தில் உள்ள கற்பாறையில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் 34 வயதுடைய காரின் சாரதி படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நுவரெலியாவில் இயங்கும் தனியார் வைத்தியசாலையின் விசேட வைத்தியர் ஒருவருக்கு சொந்தமான அதிசொகுசு காரே இவ்வாறு விபத்துக்குள்ளானது என நானுஓயா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் இருந்து நுவரெலியா நோக்கி சென்ற சொகுசு கார் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியில் இழுத்துச் செல்லப்பட்டு கற்பாறையில் மோதி விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்படுகிறது. வேகமாக சென்ற காரின் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் அல்லது சார திக்கு நித்திரை கலக்கம் ஏற்பட்டதால், விபத்து ஏற்பட்டிருக்கலாம் என விசாரணை நடத்தி வரும் நானுஓயா பொலிஸார் கூறியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் நானுஓயா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




# தொடர்ந்து அதிகரிக்கும் தேர்தல் முறைப்பாடுகள்

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கடந்த 24 மணித்தியாலங்களில் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு 184 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 23 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையங்களுக்கு 161 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதன்படி ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகக் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளின் மொத்த எண்ணிக்கை 4,215 ஆக அதிகரித்துள்ளது.

தேர்தல் விதிமுறைகளை மீறியமை தொடர்பில் 4,097 முறைப்பாடுகளும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 30 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த ஜுலை மாதம் 31 ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியிலேயே இந்த முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதேநேரம் கிடைக்கப்பெற்ற மொத்த முறைப்பாடுகளில் 3,641 முறைப்பாடுகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளமையுடன் 574 முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.



# 98 வீத வாக்காளர் அட்டை விநியோகம் நிறைவானது

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகப்பூர்வ வாக்காளர் அட்டைகளில் 98 சதவீதமானவை விநியோகிக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதி தபால் மா அதிபர் ராஜித கே. ரணசிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதுவரையில் உத்தியோகப்பூர்வ வாக்காளர் அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் எதிர்வரும் 18, 19, 20 மற்றும் 21 ஆம் திகதிகளில் அருகில் உள்ள தபால் அலுவலகங்களில் அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.



# பந்தயத்துக்காக மோட்டார் சைக்கிள் செலுத்திய 18 இளைஞர்கள் கைது

பிலியந்தலை - ஜாலியகொடை பகுதியிலுள்ள கிளை வீதியொன்றில் பந்தயத்துக்காக மோட்டார் சைக்கிள் செலுத்திய 18 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிற்பகல் முதல் நள்ளிரவு வரை மோட்டார் சைக்கிள் மற்றும் ஓட்டோக்கள் பந்தயத்தில் ஈடுபடுகின்றன என பொலிஸின் அவசர இலக்கத்திற்குத் தொடர்ந்தும் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

அதனடிப்படையில் மேற்கொள்ளப் பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்த குழுவினர் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது 18 பேர் கைது செய்யப்பட்டனர். 12 மோட்டார் சைக்கிள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 17.09.2024




இன்று உங்கள் முயற்சிகளில் வெற்றி பெறுவதற்கும், உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கும் சாதகமான நாள். உங்கள் செயல்களை இன்று தன்னம்பிக் கையுடன் ஆற்றுவீர்கள்.

உங்களின் தனிப்பட்ட திறமைகள் காரணமாக உங்கள் செயல்திறன் எடுத்துக்காட்டாக அமையும். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறையை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையுடன் நல்ல பிணைப்பு வளரும்.

கையில் உபரிப் பணம் காணப்படும். எதிர்பாராத வகையில் பண வரவு காணப்படும்.

ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் காணப்படாது. நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




இன்று சுமூகமான பலன்கள் கிடைக் கும். இது உங்களுக்கு திருப்தியை ஏற்படுத்தும். உற்சாகமான வாய்ப்புகள் உங்கள் ஆர்வத்தை மேம்படுத்தும்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை வெளிபடுதுவீர்கள். உங்கள் செயல் திறனுக்கு சிறந்த அங்கீகாரம் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் அபரிமிதமாக இருக்கும். நிதி வளர்ச்சி உற்சாகமளிக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் ஆரோக்கியத்துடனும் ஆற்றலுடனும் காணப்படுவீர்கள்.




இன்று செயல்களை பொறுமை யுடன் கையாள வேண்டிய சூழ்நிலை காணப்படும். உங்கள் இலக்குகளை அடைவதில் தாமதம் காணப்படும். ஒரு முடிவை எடுப்பதற்கு முன் ஒன்றிற்கு இரண்டு முறை யோசனை செய்வதன் மூலம் நன்மை விளையும்.

இன்று முன்னேற்றகரமான பலன்களுக்கு சாத்தியம் இல்லை. அதிகப் பணிகளை நீங்கள் திட்டமிட்டு அதன்படி கையாள வேண்டும்.

கவனமற்ற பேச்சு காரணமாக உங்கள் துணை யுடனான உறவில் நல்லிணக்கம் பாதிக்கப்படும். சகஜமான அணுகுமுறை நல்ல பலனைத் தரும்.

நிதி வளர்ச்சி திருப்திகரமாக இருக்காது. இன்று கூடுதல் செலவுகள் ஏற்படும்.

ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்காது. நீங்கள் தொடை வலியால் பாதிக்கப்படலாம்.




இன்று முன்னேற்றமான பலன்கள் காண சாதகமற்ற நாளாக இருக்கும். நீங்கள் உங்களை உற்சாகமாக வைத்துக் கொள்ள வேண்டும். உங்களைச் சுற்றியுள் ளவர்களை மகிழச் செய்ய வேண்டும். சூழ் நிலையை அனுசரித்துப் போவதன் மூலம் லேசான உணர்வு காணப்படும். பிரார்த்தனை மேகொள்வதன் மூலம் நன்மை காணலாம்.

அதிக பணிகள் காரணமாக திருப்தியான நிலை காண்பது கடினமாக இருக்கும். உங்கள் மேலதிகாரிகளுடன் சில பிரச்சினைகள் காணப்படும்.பணிகள் அதிகமாக காணப்படும். ஓய்வுக்கு நேரம் இருக்காது.

உங்கள் மனதில் எதிர்மறை எண்ணம் காணப்படும். இது உங்கள் துணையுடனான உறவை பாதிக்கும்.

பணப்புழக்கம் குறைவாக இருக்கும். நிதி சம்பந்தமான முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.




இன்று உற்சாகமான நாள். இன்று நிறைய வாய்ப்புகள் காணப்படும். அது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். உங்கள் முடிவெடுக்கும் திறமை அபார மாக இருக்கும்.

உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். நீங்கள் பணிகளை எளிதாக முடிப்பீர்கள். கூடுதல் பண வரவு காணும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் துணையுடன் தரமான நேரத்தை பகிர்ந்து மகிழ்வீர்கள்.

உங்கள் கையிலுருக்கும் பணம் போதுமானதாக இருக்கும். நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும்.

மன உறுதி காரணமாக இன்று நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். நம்பிக்கை அதிகமாக காணப்படும். உங்கள் இலக்கை வெற்றிகரமாக அடைவீர்கள்.

பணியிடத்தில் நன்மையான பலன் கள் கிடைக்கும். உங்கள் பணிகளை சரியான நேரத்தில் முடிப்பீர்கள். உங்கள் சக பணியா ளர்களின் ஆதரவு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் மிகவும் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வதன் மூலம் மகிழ்ச்சியும் உற்சாகமும் காணப்படும்.

பணவரவு அதிகமாக இருக்கும். உங்கள் கையிலிருக்கும் பணம் திருப்திகரமாக இருக்கும்.




நீங்கள் பொறுமையுடனும் உறுதி யுடனும் செயல்பட வேண்டும்.விரை வான அணுகுமுறையை தவிர்க்க வேண்டும். வளர்ச்சியை நோக்கி உங்கள் இலக்குகளை அமைத்துக் கொள்ளும் யுக்தியை மேற்கொள்வது அவசியம்.

பணிகள் அதிகமாகவும் சவால்கள் நிறைந்தும் காணப்படும். சக பணியாளர்களின் ஒத்துழைப்பின்மை காரணமாக சில சமயங்களில் நீங்கள் உணர்ச்சி வசப்படலாம்.

உங்கள் துணையிடம் குழப்பமான மனநிலையை வெளிப்படுத்துவீர்கள். இது சிறந்ததல்ல. நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும். இல்லையெனில் ஏமாற்றம் ஏற்படும்.

நிதி நிலைமை இன்று சீராக இருக்காது. தேவையற்ற செலவுகள் ஏற்படும். இது உங்களுக்கு கவலை ஏற்படுத்தும்.

இன்று ஆரோக்கியக் குறைவு காணப்படும்.




இன்று பதற்றம் காணப்படும். சில அசௌகரியங்கள் காணப்படும். இன்று பொறுமையாக இருக்க வேண்டியது அவசியம். அமைதியின்மை உணர்வை தவிர்த்து அமைதியாக இருக்க வேண்டும்.

பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் திட்டமிட்டு பணியாற்ற வேண்டும். பணிகளை கூடுதல் கவனத்துடன் மேற்கொள்ள வேண்டு. பணியிடத்தில் உங்கள் திறமைகளை நிரூபிக்க இயலாது.

உங்கள் துணையுடன் நீங்கள் மென்மையாகவும் அன்பாகவும் உணர்வுகளை பகிர்ந்து கொள்ள இயலாது. என்றாலும் இன்று நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டியது அவசியம்.

இன்று கூடுதல் செலவுகள் காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 17.09.2024




இன்று நன்மை விளையும் நாள். திருப்தி காணப்படும் நாள். உங்கள் முயற்சியின் மூலம் வெற்றி காணும் நாள். பயணங்கள் மூலம் ஆதாயம் கிட்டும் நாள்.

பணியிடத்தில் உங்கள் செயல்திறனுக்கு மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும். உங்களின் தனித்த திறமை மூலம் அவர்களின் ஆதரவும் அங்கீகாரமும் கிடைக்கப்பெறுவீர்கள்.

உங்கள் குடும்பத்தில் மகிழ்ச்சியான நிகழ்ச்சிகள் நடைபெறலாம். விருந்தினர்களின் வருகையால் இருவரும் அவர்கள் தேவைகளை பூர்த்தி செய்வதில் மும்மரமாக இருப்பீர்கள்.

பண வரவு அதிகமாக இருக்கும். பணத்தை சேமிக்கும் அளவிற்கு பாதுகாப்பு காணப்படும்.




உங்கள் செயல்களில் கவனம் தேவை. உங்களை குழப்பும் எதிர்மறை எண்ணங்களை தவிர்க்கவும். உங்கள் நெருங்கியவர்களிடம் பேசும் போது வார்த்தைகளில் கவனம் தேவை.

நீங்கள் உங்கள் பணியில் தவறுகளை செய்ய நேரலாம். இது உங்களுக்கு கவலை அளிக்கும். உங்கள் பணிகளை கவனமுடன் மேற்கொள்வது நல்லது.

உங்கள் துணையுடன் வாக்குவதங்கள் செய்வீர்கள். உறவில் நல்லிணக்கம் காண இத்தகைய நடத்தையை தவிர்க்க வேண்டும்.

இன்று அதிக செலவுகள் காணப்படும். தேவையற்ற செலவுகள் ஏற்படும்.

இன்று கண் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. மனக் குழப்பங்களால் இன்று உங்கள் ஆரோக்கியம்




இன்று உங்களுக்கு சாதகமான நாள். விளைவுகள் உங்களுக்கு சாதகமாக இருக்க நீங்கள் அனுசரணையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் திறமையை மேம்படுத்த நீங்கள் சிறந்த கவனத்துடன் பணியாற்ற வேண்டும். திட்டமிடுவதன் மூலம் விரும்பிய பலன்களை அடையலாம்.

உங்கள் துணையிடம் அதிருப்தி மற்றும் அசௌகரியம் உணர்வீர்கள். உங்களின் வேறுபாடான அணுகுமுறை உங்கள் துணையுடனான உறவை பாதிக்கும்.

இன்று லாபம் நஷ்டம் இரண்டும் காணப்படாது. நீங்கள் பணப் பரிவர்த்தனைக்கான ஆவணங்களை முறையாக பராமரிக்க வேண்டும்.




இன்று உங்கள் வளர்ச்சிப் பாதையில் தடைகள் காணப்படும். என்றாலும் அர்ப்பணிப்பு மற்றும் பொறுப்பான அணுகுமுறை மூலம் சவால்களை எதிர்கொண்டு வெற்றி பெறலாம்.

வேலை தொடர்பான பயணம் காணப்படுகின்றது. விரும்பத்தகாத சூழ்நிலை ஏற்படும் என்பதால் பயணத்தின் போது கவனமாக இருக்க வேண்டும்.

அமைதியாகவும் சுமூகமாகவும் இருப்பதன் மூலம் உறவில் நல்லிணக்கத்தை தக்க வைத்துக் கொள்ள முடியும். உங்கள் மன நிலையில் மாற்றம் வேண்டும்.

இன்று பண வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். நீங்கள் உங்கள் சம்பாத்தியத்தை அனுபவிக்கும் நிலையில் இருக்க மாட்டீர்கள்.

இன்று பதற்றமாக காணப்படுவீர்கள்.

